ஜனவிநோதினி.

இல. 10.] அக்டோபர்மீ 1875. [புஸ்த. VI.

அலஹாபாத் கோட்டை.

இந்தியாவிலுள்ள பழைய பட்டணங்களிலொன்றாகிய அலஹா பாத் என்னும் நகரம் கங்கையும் யமுனையும் ஒன்றாய்க் கூடுகிற விடத்தில் அல்லது பிரயாகையில் இருக்கின்றது. அது சுமார் காசிக்கு ஏழுகாதம். அந்தப் பட்டணத்துக்குக் கொஞ்சம் தூரத்தில் பிரயாகைக்கருகில் ஒரு கோட்டையுண்டு. அதன் ஒரு பாகம்மாத்திரம் பக்கத்துப்படத்தில் காட்டப்பட்டிருக்கிறது. 1583-ம் வருஷத்தில் ஆக்பர் என்பவன் அதை ஸ்தாபித்தான். இது இங்கிலீஷ்காரருடைய கையில் அகப்பட்டபிறகு மிக்க சீர் திருத்தமடைந்து கட்டடங்களும் அதிகமாய்க் கட்டப்பட்டன. அந்த இரண்டு நதிகளின்வழியாய் வருகிற கப்பல்களெல்லாம் அங்கே வந்துதான் போகவேண்டும். அந்தக் கோட்டை பலத்த ஐரோப்பியருடைய படைகளால் அன்றி மற்றொருவராலும் பிடிக் கத்தக்கதன்று. 1857-ம் வருஷத்தில் நடந்த கலகத்தில் அதனருகி லிருந்த அங்கிலேயர்கள் அதை முற்றிக்கைபோட்டுக்கொண்டனர். ஆனால் அந்தத்தடவை அவர்கள் ஜயமடையவில்லை. ஆயினும் உடனே கொஞ்சக்காலத்தில் அந்தக் கோட்டையைமாத்திரமே யன்றி அலஹாபாத் பட்டணத்தையும் கைக்கொண்டார்கள். அக்கோட்டையின் கங்கையை நோக்கிக்கொண்டிருக்கிற வெளிச் சுவர்மாத்திரம் பக்கத்துப்படத்தில் காட்டியிருக்கிறது. பட்டணத் தைப் பார்த்துக்கொண்டிருக்கிற பக்கமானது ஐரோப்பியருடைய சிற்பவேலைகள்செய்து இன்னும் வெகு விநோதமாயிருக்கும். அல ஹாபாத் அல்லது பிரயாகையை ஹிந்துக்கள் தாங்கள் பூஜிக்க வேண்டிய புண்ணியஸ்தலங்களில் ஒன்றாய்க்கொண்டு தீர்த்தயாத் திரை செய்கிறார்களென்பது யாவருக்குந்தெரியுமே.

இத்தேசத்தின் பூர்வநிலைமை.

சிலநாளைக்குமுன் இத்தேசத்து கவர்னர் ஜனரலாயிருந்த லார்டு லாரென்ஸ் துரை, இந்த இந்துதேசம் சுதேசராஜாக்களுடைய ஆளுகையின்கீழ் இருந்ததற்கும், இப்போது இங்கிலீஷ்காரர்களுடைய. ஆளுகையிலிருப்பதற்கும் உள்ள வியத்தியாசத்தைப்பற்றி அவரவர்களுடைய அபிப்பிராயத்தை அறியவேண்டுமென்று, தங்கள் தங்களுடைய கருத்தைத் தெரிவிக்கும்படி இத்தேசத்திலுள்ள கனவான்களுக்கு எழுதியனுப்பினார். அதற்கு அவர்கள் எல்லாரும் ஓரே அபிப்பிராயமாய் எழுதினதாவது: இத்தேசத்துக் குடிகளெல்லாம் சுதேச ராஜாக்களின் துரைத்தனத்தைவிட இந்த இங்கிலீஷ் துரைத்தனத்திலே அதிகமான சவுக்கியமும் நன்மையும் அடைந்துவருகிறார்கள் என்பதற்கு யாதொரு ஆக்ஷேபமுமில்லை. ஆனால் பிராமணஜாதியாரும், யுத்தவீரர்களும், எளியராஜாக்களும் இதை அவ்வளவு சரியானதாய் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். டெல்லி ஆக்ராமுதலான சில பட்டணங்களிலுள்ள வர்த்தகர்கள்மாத்திரம் முற்காலங்களில் அதிகமாயிருந்த வீண்செலவு இந்தத் துரைத்தனத்தில் இல்லையென்று சந்தோஷிக்கிறார்கள். பலவந்தமாய் அபிஞ்சியாள் பிடித்துத் தங்களுக்கு அடிமைகளாக்கிக்கொள்வதும், குடிகளின் பொருள்களைக் கொள்ளையடிப்பதும் இவைமுதலான முற்காலத்து அநியாயங்கள் இப்போது இல்லையாயினும், தாங்கள் ஜனத்தொகையில் அதிகமாயிருப்பதுபற்றி வியவசாயத்தொழிலும் சிற்பவேலையும் செய்கிற ஜனங்கள் இப்போது விசேஷநன்மை ஒன்றையும் அதிகமாய்க் கண்டதாய் அறிவிக்கவில்லை. நாணாளும் வேலைசெய்து ஜீவிக்கிறவர்களுக்கோ ஒரு விசேஷமுமில்லை. அவர்களுக்கு எவன் ராஜாவாயிருந்தால் என்ன, அவர்கைக்கு எட்டாத நாணயங்களில் எவன் தலைமுத்திரை போட்டிருந்தாலென்ன, எவன் எந்தச்சட்டம் பிறப்பித்தாலென்ன? தங்கள் தாதை மூதாதை முதலியவர்கள் செய்துவந்ததுபோலக் கட்டைவெட்டுவதும் தண்ணீர் தூக்குவதுமே இப்போதும் அவர் தொழிலாயிருக்கிறதே! ஆயினும் ஒருவிஷயத்தில் அவர்கள் எவ்வளவு வருத்தமிருந்தாலும், முற்காலத்தையே விசேஷமாய் நினைக்கலாம். அக்காலத்தில் எவ்வளவு தாழ்ந்தவகுப்பினராய் இருந்தாலும் நாளளவில் நமக்கு நல்லகாலம் வந்தாலும்வரலாமென்கிற எண்ணம் எவர்க்குமிருக்கலாம். முன் 'ஆக்பர்' என்பவன் தான் பட்டத்திற்கு வந்தபோது தன்கீழிருந்த சேனைகளின் குணத்தைக்கண்டு உடனே அவர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்கொடுத்தான். பூனைப்பட்டணத்து அரசனுக்கு இரண்டு பிரதான மந்திரிகளிருந்தார்கள். அவர்களில் ஒருவன் புரோ

கிதனும் கோவில்களில் பாடுகிறவனுயுமிருந்தான். மற்றொருவன் எங்கேயோ எளியவேலை செய்துகொண்டிருந்த கூலிக்காரன். ஜயபூர் ராஜாவினுடைய பிரதானமந்திரி ஜாதியில் அம்பட்டன். ஹோல்கார்தேசத்தை முதல்முதல் கைக்கொண்டவன் ஒரு இடையன். விந்தியாதேசத்தான் ஊர்பேர்தெரியாத ஒரு தாழ்ந்த குடித்தனக்காரனுயிருந்தவன். ஹைதர் முதலில் குதிரைப்பட்டாளத்தில் ஒருவனுயிருந்தவன். இம்மாதிரி அநேகம் எளியவர்களெல்லாம் உயர்ந்த அதிகாரத்திற்கு வரக்கண்டிருக்கிறோம். மேலும் முற்காலத்து அரசர்கள் அநேகருக்கு வெகுமதியாய் அநேகம் கிராமங்களும் தனங்களும் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் பலவிதமாய் அநேகருக்கு உபகரித்திருக்கிறார்கள். ஆயினும் இதற்குமாருக அநியாயங்களும் அநேகம் நடந்துவந்தன. 'மெய்வருந்தக் கூலிதரும்' என்கிற பெரியோர்பேச்சு அக்காலத்தில் பொய்த்துக் கிடந்தது. குடிகள் உழைத்துப் பயிர்செய்தால் அதன் மாசூலை அரசர்கள்தான் அறுத்துக்கொண்டுபோவார்கள்; தோட்டக்கால் பயிர்கள் ஒன்றும் குடிகள் கைக்கு எட்டாது; மாடுகன்று முதலியவைகளையும், பற்பல வீட்டுச்சாமான்களையும் அமிஞ்சிக்கு எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள்; பிள்ளைகுட்டிகளைக்கூடப் பிடித்துக்கொண்டுபோய் வீணுக்கு வேலைசெய்யச்சொல்லி அடிப்பார்கள்.

இந்தத் துரைத்தனத்திலோ இவ்விதமான அநியாயங்கள் ஒன்றுமில்லாமல் குடிகளுடைய பொருள்கள் அனைத்தையும் தம்பொருள்போலக் காப்பாற்றுகிறார்கள். யாராவது குற்றஞ்செய்ததாய்த் தெரிந்தால் அதைச் செம்மையாய் விசாரித்துப் பிறகு அவர்களைத் தண்டிப்பதேதவிர முன்னதாய் ஒன்றும் செய்கிறதில்லை. முற்காலத்திலோ அவரவர்கள் இஷ்டப்படி தண்டனை செய்வார்கள். நியாயமென்பது சிறுதுமில்லாமலிருந்தது. அதன் வரலாற்றைக் கொஞ்சம் கீழே விவரிக்கிறோம். மொகலாயருடைய அரசாளுகையில், நூறு திருடர்கள் கையும்விலங்குமாய் அரசன் முன்னிலையில் கொண்டுநிறுத்தப்பட்டபோது, அவ்வரசன் விசாரணைமுதலியவை ஒன்றும் நடத்தாமல், உடனே அவர்களுக்குச் சிக்ஷை விதித்தான். அவர்களில் தலைவனை நாய்களைவிட்டுச் சின்னபின்னமாய்ப் பிடுங்கும்படியாயும், மற்றவர்களைக் கொலைசெய்யும்படியாயும் கட்டளையிட்டான். அந்தக் கொலைபாதகர்களும் அப்படியே அவர்களைப் பிடித்துக்கொண்டுபோய் முதல்வனைப் பனிரண்டு நாய்களைவிட்டுத் துண்டுதுணுக்கையாய்ப் பிடுங்கும்படிசெய்தார்கள், மற்றவர்களைத் தெருவுக்கு நாலுபேராய்ப் பிரித்து அங்கங்கே அவரவர்களைக் கொலைசெய்தார்கள். அவர்களில் பதின்மூன்று பேரைக் கையுங்காலையும் சேர்த்துக்கட்டிக் கொஞ்சம் ஓட்டிக்கொண்டிருக்கும்படி தலையைவெட்டி ரத்தம் தாரைதாரையாய்ப் பெருக,

ஆவி துடிக்க வேடிக்கைபார்த்தார்கள். அக்காலத்துவழக்கமே இப்படிப்பட்டதுதான். ஜிஹாங்கீர் அரசாண்டநாளில் சகலமான பொருள்களும் அரசனையே போய்ச்சேரும்படி இருந்ததனால் ஜனங்களெல்லாம் ஒன்றையும் சீர்ப்படுத்தாமற்போனார்கள். அதனால் பூமியெங்கும் விளைபொருளேயில்லாமல் அழிந்துபோயினவென்றும், எங்கேகண்டாலும் சண்டையும் கூச்சலும் கொள்ளையுமாயிருந்ததென்றும் கேள்விப்பட்டிருக்கிறோம். பின்பு கொஞ்சநாளில் ஷாஜிஹான் அந்தப் பட்டத்திற்கு வந்தகாலத்தில் முன் இருந்த ஸ்திதியை விசதமாய் எழுதியிருக்கிறார்கள். பூமியெங்கும் மணல்மேடுகளும், காம்புநிலங்களும், மலைகளும், குன்றுகளுமாய்க் குடிகளேயில்லாமல் இருந்தன. கொஞ்சநஞ்சம் சாரக்ஷேத்திரமாயிருந்தால் அவைகள் பயிர்செய்யக் குடிகளில்லாமல் பாழாய்க்கிடந்தன. பண்ணைசெய்யக் குடிகளில்லாமற்போனது ஏனெனில், மேலதிகாரிகள் தங்களுக்கு வேண்டும்போதெல்லாம் குடிகளை நசுக்கி, தனங்களையும் தானியங்களையும் அபகரித்து, குடிகளையும் அமிஞ்சிவேலைக்காரர்களாய்ப் பிடித்துக்கொண்டுபோவதனால் அவர்கள் தங்கள் நிலங்களை விட்டுவிட்டுப் பட்டணங்களில் மூட்டைதூக்குகிறவர்களாயும், காவற்காரர்களாயும் இருக்கத் தலைப்பட்டார்கள். ஷாஜிஹான் பட்டத்திற்கு வந்தபிறகு இந்தத் தீமைகளொன்றுமில்லை; படைச்சேவகர்களாயும், ராஜாங்கத்து உத்தியோகஸ்தர்களாயும் இருந்தவர்களுக்குக் கொஞ்சங்கொஞ்சமாய் நிலங்களைக் கொடுத்துப் பயிர்செய்வித்து, இன்னும் அநேகம் நன்மைகள்செய்து நாடெங்கும் சீர்திருத்தினான். அவன்காலத்திற்குப்பிறகு வழக்கப்படி தீமைகள் உண்டாகத் தலைப்பட்டன. அப்போது ஜனங்களெல்லாம் மேலதிகாரிகளண்டை மிகவும் பயந்து தம்பொருள்களைக் காக்க வழி வேறொன்றுமில்லாமல், அரையில் கந்தைத்துணியுடன் அற்பமான உணவுகளைப் புசித்துக்கொண்டு எளியகுடிசைகளில் குடியிருந்து, பார்ப்போர்களுக்குத் தங்களை ஏழைக்குடிகள்போலக் காட்டினார்கள். பணத்தைக் கையில் வைத்துக்கொண்டிருந்தால் எப்படியாவது தெரிந்துபோகப்போகிறதேயென்று அவைகளையெல்லாம் பூமியின்கீழ்ப் புதைத்துவைத்தார்கள். முக்கியமாய் அக்காலத்து ராஜாக்கள் செய்துவந்த கெடுதியென்னவென்றால், ஒருவரையும் செம்மையாய்ப் பிழைக்கவொட்டுகிறதில்லை; பயிரிடுவதற்கு அவசியம் வேண்டிய கால்க்சம் முதலியவைகள் பாழடைந்துபோனால் அவைகளை மறுபடி செப்பனிடுகிறதேயில்லை. வீடுமுதலியவைகள் இடிந்துபோனால் போனதுதான்.

பதினேழாவது நூற்றாண்டில் ஒரு தீர்ப்புநடந்தது. ஒரு ராஜாவண்டை நான்கு திருடர்கள் விசாரணைக்குவந்தார்கள். அவர்களில் ஒருவன் ஒரு வீட்டில் கன்னம்வைத்து ஒரு பெண்பிள்ளையையும், மூன்று குழந்தைகளையும் கொலைசெய்தான். அவனைக் கைகளையும்

சீர்திருத்திய பயிர்த்தொழில்.

(தொடர்ச்சி.)

பருத்தி.

இச்செடி சௌக்கியமாய் விளைவதற்கு எவ்வளவும் தகாதபூமி என்று செம்மையாய்த் தெரிந்த இந்த ஜில்லாவிலே பருத்தி விளைவைப் பரிசோதிப்பதில் செவ்வையான பலன் இராதென்று நான் அந்தப் பாகத்தில் பருத்தி பயிராக்கத் தொடங்கும்போது அடிக்கடி சொல்லக்கேட்டேன். இந்தப் பாகத்தில் அதிக நிலமாகிய தாழ்ந்த மணல்பூமியில் பருத்தி பயிரிடக் கூடாதென்று அநுபோகத்தினாலும் தெரியவந்தது.

இத்தோடேதிருப்தியடைய எனக்குஇஷ்டமில்லை; சமீபத்திலிருக்கிற குடிகள் அபிப்பிராயத்தில் அதிக நம்பிக்கைவைப்பதினால் இப்படித் தோன்றுகிறதென்று எனக்குத் தோன்றிற்று. இந்த ஜில்லாவின் மழைகாற்று வெயிலின் தன்மையையும் ப[illegible] சாதாரணமாய் விளைகிற ஜில்லாவின் மழைகாற்று வெயிலின் தன்[illegible]ம் ஒத்துப்பார்த்ததில் இத்தேசத்திய காலஸ்வயிவத்தில் பருத்திவி[illegible] கெடுதியானதொன்றும் காணப்படவில்லை. பருத்திநிலங்களென்று சொல்லப்பட்டவற்றிற்கு மிகவும் தாழ்ந்ததாகயிருக்கிற இந்த ஜில்லா மண்ணை எருவினால் செழிக்கச்செய்யக்கூடுமென்று எண்ணினேன்.

முதல்பரிட்சை உபாயமாய்ச் செய்தேன், மேலேமேலே கிருஷிசெய்யும் படியான வகையாய் பலன் கிடைத்தது. மறுபடி மறுபடி ஒன்றைவிட ஒன்றதிகமாய்ப் பலதடவைகளில் பரிட்சைசெய்ததில் பருத்தி இந்தப் பாகத்தில் சாதாரணமாய்ப் பயிராக்கும்படியிருக்கிறது. (New Orleans) நியூ ஆர்லியான் தேசத்தில் உண்டாகிற தினுசு நான் எடுத்துக்கொள்ளுகிறது நெடுநாளாய் வழக்கப்பட்டிருக்கிற உயர்ந்த பயிரிடலுக்கு நன்றாய் தகுந்திருக்கிறது. பருத்தியை விளையச்செய்யும்படி இந்தத் தாழ்ந்த மண்ணுக்குப் போடவேண்டிய எருப்போட்டால் நாட்டுப்பருத்தி அதிகமாய்ப் பலனைக் கொடாமல் தழையும் கொம்புமாத்திரம் பெருத்திருக்கும். இது இப்படியிருக்க, நியூ ஆர்லியான் ஜாதிக்கு அப்படிப்பட்ட எருப்போட்டால் நன்றாய்ப் பலிக்கும்.

பருத்தி பயிராகிற ஜில்லாக்களின் நல்ல மண்களில் இது எருவில்லாமல் பயிராக்கக்கூடும். இந்த ஜில்லாவின் தாழ்ந்தமண்ணில், அசாத்தியமென்பது நிஜமே; ஆனால் அவ்விடத்தில் விளைவு மட்டுதான். செவ்வையாய்ப் பயிர் செய்து எருப்போட்டால் அதேநிலத்தில் எவ்வளவு விளையுமோ அதில் நாலத்தொன்று விளைவதே கஷ்டம். இந்தப் பரிட்சைபார்த்ததில் அடிக்கடி செய்திருக்கிறேன். ஒரு ஏகராவுக்கு 200 பவுண்டு சுத்தமான (கொட்டையில்லாத) பஞ்சு உற்பத்தியாகையில் பருத்தி ஜில்லாக்களில் ஏகராவுக்கு 75 பவுண்டுதான் ஆகும்.

இந்த பாரத்துக்குத் தாழ்ந்ததாயில்லாத மண்ணையுடைய அநேகமாயிரம் ஏகரா நிலங்கள் இந்த சென்னபட்டணத்தைச் சுற்றியிருக்கின்றன. அப்படிப்பட்ட நிலம் வருஷத்தில் இரண்டுபங்குநாள் சும்மாயிருக்கிறது; மற்ற ஒருபங்குநாளில் வரகு கொள்ளு விதைக்கப்பட்டு சொல்பபலனைத் தரும்.

இந்த நிலங்களில் பருத்திவிதைத்து கஷ்டத்துக்குத்தக்க பலன் உண்டாகும்படி செய்யலாம். பயிர்செய்வதிலும் எருப்போடுவதிலும் நேரிடும் அதிகச்செலவு கப்பலேற்றுவதற்கு நேரிடும் செலவில் கட்டிவருவதன்றியில் மொத்தத்தில் லாபமாயிருக்கும்.

இந்தப் பாகத்தில் உற்பத்தியான பருத்தி லண்டனில் விற்றவிலை பவுண்டுக்கு 6⅞ பென்சு அதேகாலத்தில் திருநெல்வேலி பஞ்சு 6½ பென்சு விழுக்காடும், டால்லரா பஞ்சு $6\frac{1}{16}$ விழுக்காடும், மேற்கத்தியது 6 விழுக்காடும், காகனடு 5⅞ விழுக்காடும், பங்காளத்தியது 3⅞ வீதமும், ரங்கூனது 4 விழுக்காடும், அமெரிக்கா நியூ ஆர்லியான் பஞ்சு 8⅜ விழுக்காடுமாக விற்றது. அந்தக்காலத்தில் லண்டனில் பஞ்சு மிகவும் மலிவாயிருந்தது: அப்படிக்கில்லாவிட்டால் இன்னும் அதிகமாக விலை எழும்பியிருக்கும்.

இந்தப் பாகத்தில் முன் உற்பத்தியாய்க் கொண்டிருந்த பஞ்சைவிட் காணயமும் மெதுவும் இப்போதைய பஞ்சுக்கு அதிகமாயிருக்கிறது.

நியூ ஆர்லியான் பஞ்சு கொட்டைபிரித்தால் 100-க்கு 32 வீதம் காணுகிறது. நாட்டுப்பருத்தியோவென்றால் 100-க்கு 25 ரேஷிக்குத்தான் ஆகும்.

சென்றவருஷத்திய ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டுள்ளபடி ஈஜப்ட் தேசத்து பருத்திச்செடிகள் இன்னும் பயிராய்க்கொண்டிருக்கஉல் அவைகள் இப்போதிருப்பதைப்பார்த்தால் நியூ ஆர்லியான் ஜாதியைவிட அதிகநாள் தாக்குப்பிடிக்குமென்று தோன்றுகிறது. ஈஜப்ட் பருத்திப் பயிர்செய்வதில் எனக்கு ஒருவருஷத்திய அனுபோகம் அதிகமாய் உண்டாயிருக்கிறது. இது பயிர்செய்வதில் நியூ ஆர்லியான் ஜாதியைவிட அதிகப்பட்டுப் படிச்செலவு பிடிக்கிறதென்றுதான் இப்போதும் நினைக்கிறேன்.

நியூ ஆர்லியான் பருத்திபோல ஈஜப்ட் பருத்தி நேரேவளராமல் பக்கவாட்டாய் கிளைக்கிறபடியினால் தூரதூர நட்டாலொழிய மாடுகளை உபயோகப்படுத்தக்கூடாமையாயிருக்கிறது. ஜாக்கிரதையாய் சிலவருஷங்கள் கிளைகளைக் கழித்துக்கொண்டுவந்தால் செடிகளை ஒருவேளை சற்று நேரே வளரும்படி செய்யலாம். இந்தப் பருத்தி நெடுநாள் வளர்ந்துகொண்டிருக்கிறபடியால் அது வளருங்காலத்தில் அடிக்கடி பயிரடிக்கவேண்டியதாயிருக்கிறது. பருத்திச்செடியின் அருநிழலினால் களைகள் உண்டாகிறபடியால் அடிக்கடி களைபறிக்கவேண்டியிருக்கிறது. இந்த களைபிடுங்கவேண்டியத்துக்காக மாடுகளைவிட்டு மனிதரை அமர்த்துவதில் செலவு கொஞ்சம்குறைய இரட்டிப்பாகிறது. இந்தச்செடிகளிலிருந்து சென்றவருஷம் உற்பத்தியான உடவாரம் கொஞ்சம். இது ஒருப்ட்சம் காலசுபாவத்தினால் என்னலாம். சுல்பமாய்க் கொட்டையைப் பிரிக்கக்கூடுமென்பது நான்பார்த்த தினுசுகள் எல்லாவற்றிலும் இதற்குள்ள சிலாக்கியம்.

போர் என்கிற ஒருவிதப் பூச்சி செடிகளுக்கு மிகுந்த கெடுதிசெய்கிறபடியினால் முன் ரிபோர்ட்டுகளில் அடிக்கடி எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிற (Yckvally) ஏக்காவாலி தேசத்து ஜாதியானது முதலற்றுப்போகுமென்று நான் பயப்படுகிறேன். செடிகளை அடிக்கடி பயிரடித்துக் கிளைகளைக் களைந்து அவைகளைக் கொளுத்துவதுமுதலாகிய வெகு பிரயத்தினங்கள் செய்தும் அது நாசப்படுத்திக்கொண்டேயிருப்பதினால் செடிகளில் வெறும்கட்டைதான் இருக்கிறது. அவைகள் பயிராயிருக்கிறநிலம் அடிக்கடி பயிரடிக்கப்பட்டு பலதடவைகளில் எருவிடப்பட்டாலும் அதிக தழைகளை சிலகா

லம் விருத்திசெய்து அந்தப் பூச்சிகளுக்கு நாசஞ்செய்ய அதிக இடங்கொடுப்பதாகத் தீர்ந்ததேயொழிய வேறில்லை. இந்த உபத்திரவத்தை அடியோடே ஒழித்துப்போடலாம்; ஆனால் செடிகள் பலவீனப்படும். பலவீனமான செடிகளிடத்திலிருந்து உண்டாகும் விதை உபயோகப்படமாட்டாது.

எக்காவாலி பருத்தியானது மிகவும் விலையுயர்ந்த தினுசு. பிரேஜிலிலிருந்து இன்னும் கொஞ்சம் விதை அழைப்பித்தால் நலமாயிருக்கும். சாதாரணமாய்ப் பயிராகும் தானியமாக ஆவது கஷ்டமானாலும் இத்தேசத்து வியவசாயம் விருத்தியாக ஆக, விலையுயர்ந்த தானியங்களில் ஒன்றாக இதைப் பயிரிடக்கூடும்.

ஜலதாரையால் கீழ்வடிவுடைய இரண்டு பாத்திநிலங்களில் சோளமும் பருத்தியும் பயிரிட்டவகை.

கல்ஜலதாரையுடைய பாத்தியைச் செவ்வையாய் உழுதபிறகு மண்ணை ஆராய்ந்து நடுவிலே மேடுவிழும்படி கால்வாய்களாகப் பிரித்து மேடுகளுக்கு நடுவான அந்தப் படைசால்களில் 36 வண்டி ரத்த எரு (சாம்பலும் ஆடுமாடு வெட்டுகிற இடத்தில் கழித்ததும் சேர்ந்த கலப்பும்) கொட்டி இந்த மேடுகளைப் பிறகு கலப்பைகளால் பிளந்து ஒவ்வொருபாத்தி ஒவ்வொரு பக்கத்தெருமேலும் விழும்படி செய்யப்பட்டது. அடியிலே எருவுடையதாகச் செய்யப்பட்ட இந்தப் புதுமேடுகளை விதைக்கச் சமயமாயிருந்ததருணத்தில் குண்டியடித்தோம். 30 அங்குலதூரங்களில் இருந்த மேடுகளின் மேல் பாத்திமுழுவதும் செப்டெம்பர் 17உ விதைவிதைக்கப்பட்டது. 8800 சதுரகஜத்திற்கு விதைத்தவிதை சோளம் $8\frac{1}{2}$ பவுண்டு; பருத்தி $8\frac{1}{2}$ பவுண்டு. பயிராயிருக்கும்போது இரண்டுதரம் பயிரடித்து மூன்றுதரம் களைகொத்தினோம். சோளம் அறுவடை டிசம்பர் மத்தியில் அறுவடைக்கு தருணமாயிற்று. பருத்தி அறுவடையாக பின்னையும் கொஞ்சம் நாளாயிற்று. காலம் மெத்த வறட்சிகொடுத்திருந்தபடியால் அறுவடை பூர்த்தியாகிறதற்கு இரண்டொருமாதம் அதிகம்சென்றது. சோளம் 4147 கதிராயிற்று; பருத்தி $299\frac{1}{2}$ பவுண்டு பஞ்சாயிற்று. உலர்ந்தபின்பு 4 கதிர் சராசரியில் ஒரு பவுண்டு தூத்தி ஆய்ந்த (தூத்தாத்திய) சோளமாயிற்று. விதையோடிருந்த 100 பவுண்டு பஞ்சு $31\frac{1}{2}$ ஆய்ந்த பருத்தியாயிற்று. தாள்கதிர் உமிமுதலானதும் கண்டுமுதலின்பேரில் மதிப்பிடப்பட்டது.

ஒரு ஏகராவில் இந்தமாதிரிப் பயிரிடுவதினால் உண்டாகும் லாபநஷ்டம் கண்டுபார்த்தால் செலவு ரூபா 36-14-0ம், வரும்படி 48-14-5-ம் ஆகிறது. இத்தோடே ஜலதாரைக்கு 4-ரூபாய் சேர்த்துக்கொண்டால் ஸ்வானுபோக வட்டி கண்காணம் முதலானதுக்கு 8-ரூபாய் 5-பைசா மிகுந்திருக்கிறது. எருவினுடைய சாரம்முழுமையும் ஒருவருஷத்தில் செத்துப்போகாதாகையால் அதற்காகப் பிடித்த செலவில் 4-ரூபாய் காரம் நிற்பதாய் எண்ணிக்கொண்டு மிகுதியை 12-ரூபாயாக உத்தேசிக்கலாம்.

இரண்டு அங்குலகுழாய் ஜலதாரைவடிவுடைய பாத்தி முன் சொன்ன நிலம் எவ்விதமாகப் பண்படுத்தப்பட்டதோ அதேமாதிரியாய்ப் பண்படுத்தப்பட்டது. 21 பண்டி ரத்த எருவும், 54-புறை சுண்ணாம்பும் போடப்பட்டது. 8742 சதுர கஜத்துக்கு 11-பவுண்டு சோளமும், 9-பவுண்டு பருத்தியும் போதுமானதாயிருந்தது. இது செப்டெம்பர் 4உ விதைக்கப்பட்டது. பின்பு இரண்டுதரம் பயிரடித்து 4-தரம் களைவெட்டப்பட்டது. அறு

ப்பு ஜனவரி ஆரம்பம்வரையில் சோளம் முற்றவில்லை. பஞ்சுமுழுவதும் சேகரிக்கப் பின்னிட்டு சிலமாதங்கள் சென்றது. சோளம் 5728 கதிரும், பருத்தி 404½ பவுண்டு விரைப்பஞ்சும் உண்டாயிற்று. முன் பாத்தியில் உண்டான விகிதம் விதையில்லாத பஞ்சும் தூத்தின சோளமும் தேறிற்று.

மொத்தவரும்படி ரூபா 97-6-8 செலவு ரூபா 46-8-0 ஜலவடிவுக்கு செலவு ரூபா 3-0-0 போக ஸ்வாமிபோகம் வட்டி கண்காணம் முதலாகியதுக்காக மிகுதி ரூபா 17-14-8 காரம்போகாத எருவிற்காக 5-ரூபாய்; ஆகவட்டிமு தலானதுக்காக வரவு ரூபா 2214-8.

இந்தபலன் திருப்திகரமாயிருந்தாலும் கீழ்வடிவினால் உண்டாகும் பிர யோஜனம் இவ்வளவுமாத்திரமேயல்ல. சதுப்புசாகுபடியினால் எவ்வளவும் பலிக்கத்தகாதபடி செய்யப்பட்டிருந்த நிலமாகையாலே கிரமமாய் உண் டாகத்தக்க பிரயோஜனத்தைவிட குறைவாயிருந்தது. இதுவும்தவிர பயிரே றியிருக்கையில் முதல்பாத்தியின் ஜலதாரை அடைபட்டதினாலே, அப்படி க்கில்லாதிருந்தால் எவ்வளவு உற்பத்தியாகுமோ, அவ்வளவு உற்பத்தியாக வில்லை.

இந்தியாவிலே இந்தப்பக்கத்தில் ஜலவடிவுக்கு கல்ஜலதாரையைவிடக் குழாய்கள் தகுதியானதாயிருக்குமென்று மேலேமேலே அனுபோகத்தினா லும் ஏற்படுமென்று நம்புகிறேன்.

நாலதுவருஷத்தில் குழாய் ஜலதாரைவடிவுடைய நிலத்திலிருந்த பருத்தி சென்ற வெயில்காலமெல்லாம் பசுமையாயும் செழிப்பாயும் இருக்க, ஜலவ டிவில்லாமலிருந்த நிலத்தின்மேலிருந்தது வாடி உலர்ந்துபோயிருந்தது. இந் தப் பிரதேசங்களில் கெட்டிபூமிகளில் கீழ்வடிவினால் பிரயோஜனம் உண் டாகுமென்பதில் ஆட்சேபமில்லை.

ரங்கூனிலிருந்து பர்மாவிதைகளில் சில உயர்ந்ததினுசுகள் வரவழைத் தேன். ஒவ்வொரு தினுசையும் தனித்தனியாய் வெவ்வேறு பாத்தியில்விதை த்து நாட்டுத்தானியங்கள் பயிரிடுகிறரீதியாகவே பயிர்செய்தேன். சாதாரண மாய் நல்லபலனுண்டாகவில்லை. ஆனால் அந்தத்தேசத்திற்கும் இந்தத்தேசத்தி ற்கும் உள்ள வெயில் மழைகாற்றுகளில் அதிக பேதத்தினால் அப்படியான தாகத் தோற்றுகிறது. மேலும் அறுவடைசமயம் வெயில்காலத்தின் ஆதியிலே யானபடியாலும் இந்தக்காலம் பர்மாகாலத்திற்கு நேர்விரோதமானதாகை யாலும் விசேஷமாய் அப்படி நேரிட்டது. இந்தப்பயிரினால் உண்டான விதை மறுதடவையில் செவ்வையாய்ப் பலிக்கலாம். அந்தத் தானியங்களை இந்தப்பக்கங்களில் உண்டாகும் தானியங்களைவிட உயர்ந்த தானியங்க ளாக நினைக்கிறார்கள்.

மாட்டுத்தீனி (சாமை) ஆகஸ்டுமீ 2உ 10 பவுண்டு சாமையை 744 சதுரகஜமுள்ள ஒரு பாத்தியில் விதைத்தேன்; பயிர் துரிதமாயும் செழுமை யாயும் வளர்ந்தது.தொண்டைக்கதிராயிருந்த அக்டோபர்மீ 25உ அறுவடை செய்ததில் 4575 பவுண்டு முதல்தரம் தீனியாயிற்று. இதை உலர்த்தி கெடாதபடி பத்திரப்படுத்தி நிறுக்கையில் 144 பவுண்டு கண்டது. முதல் அறுவடையானவுடனே பயிர் மறுபடியும் செழுமையாய்க் கிளம்பி டிசம் பர்மீ 18உயில் 2673 பவுண்டு அறுவடையாயிற்று. இது உலர்ந்து 925 பவுண்டாயிற்று. விதைவிதைத்தது முதல் இரண்டாவது அறுவடையானகா

லத்திற்குள் கண்ட உடவாரம் 7248 பவுண்டுக்கு உலர்ந்ததீனி 2336 ஆயிற்று. இது ஏகராவுக்கு 15197 பவுண்டு உலர்ந்த தீனியாகின்றது.

இதுகளுக்காக இரண்டுதரம் பயிரும், 2 குண்டியும் அடித்து 2 களைபிடுங்கி புதுதண்ணீர் பாய்ச்சி 4 வண்டி மந்தை எருப்போட்டோம்.

ஒரு ஏகராவுக்கு மேல்படி பயிர்செய்ய ரூபா 40–12–0 ஆகிறது. ஒரு டன்னுக்குக் கணக்குப்பார்த்தால் ரூபா 1-14-11 விலை விழும்.

நெல்பயிர் தீனிபச்சையும் உலர்ந்ததும் நாட்டுநெல்பயிரினுல் உண்டாகும் தீனியைப்பற்றி முன்னமே பேசியிருக்கிறேன். சென்றவருஷத்தில் இந்தத் தீனி, விசேஷமாய்ப் பயிரிட்டோம். பண்ணை ஆடுமாடுகளெல்லாம் அதைச் செவ்வையாய்த் தின்கிறதுகள். இத்தேசவாசிகள் பயிரிடுகிறதுபோல பயிரிடாமல் செவ்வையாய் எருவிட்டு பயிரிட்டால் மாடுகளுக்கு அதிக பலம் கொடுக்கும். இது சோளக்கட்டையைப்போல் பால்மாடுகளுக்கு அவ்வளவு உபயோகமானதல்ல. கறவைப்பசு நித்தியம் 45 பவுண்டு சோளக்கட்டை சாப்பிட்டு, தினம் 3 படி பால் கொடுத்ததை நிறுத்தி வைக்கோல்போட்டு பார்த்தபோது 2 படிதான் ஆயிற்று. மறுபடி சோளக் கட்டை போட ஆரம்பித்தபோது முன்மாதிரியே பால்கொடுத்தது. இந்தப் பயிர்களின் சுபாவத்தை ஆலோசிக்கும்போது இது ஆச்சரியமாகக் காணவில்லை. நெல் ஜலப்பயிர். அது இருக்கிற நிலத்திலேயாவது பாய்ச்சுகிற தண்ணீரிலாவது போதுமான ஆகாரம் தென்படுமானுல் வெகுதுவாயில் வளரும். தண்ணீர்பாய்ச்சப்பட்ட நெல்பயிருக்கும் போதுமான ஸத்தை புன்செய்ப்பயிருக்கு சுத்தமாய்ப் போதாமையாயிருக்கும் வகையறிந்து தண்ணீர்பாய்ச்சுவதினுல் அருகேயிருக்கிற ஸத்தையை தான்சுயேகிக்கிறநெல்லை ஜாதியாக்கவும் அதை வேருக்கு எட்டும்படி செய்யவும்கூடும். சோளம் முதலாகிய புன்செய்தானியங்கள் நல்லகாலங்களில் செவ்வையாய் வளருகின்றன. அவற்றின் வேர்கள் ஸம்பந்தப்பட்டிருக்கிற மேல்பூமிதான் அவைகள் ஸத்தை கிரகிக்கிற இடம். அது மிதமாகையால் நெல்பயிருக்கு வேண்டிய ஸத்தைவிட அதிகம் அபேட்சிக்கிறது. அப்படி அதிகமாயிராவிட்டால் அவைகள் செவ்வையாய் வளராதுகள்.

செவ்வையாய் எருப்போட்டு ஜலம்பாய்ச்சினுல் நெல்பயிர்த்தீனியின் (கொழுப்பை கொழுக்கச்செய்யும் ஸத்தையை) விசேஷமாய் அதிகப்படுத்தலாமென்பதில் சந்தேகமில்லை. கீழ் அடுக்குமண்ணிலிருக்கிற ஸத்தையை புரை ஆகர்ஷணத்தினுல் (சிறுதுவாரங்களினுல் கிரகிக்கும்சக்தி) மேலே கொண்டுவருவதற்காக எப்போதாவது சிலதடவைகளில் இரண்டொரு நாள் உலரவைப்பதினுலும் மற்றப்படி ஜலச்செலவு குறைவாய்ச் செய்வதினுலும் போஷணத்திரவம் அதிகமுடைய தீனியை உண்டுபண்ணலாம். சோளப்பயிரைவிட சாதாரணமான நெல்பயிர்த்தீனி இளப்பமாயிருந்தாலும் அதைவிட சுலபமாய் பயிராக்கக்கூடுமாகையால் இதன் பிரயோஜனமும் அதிகம்தான். பின்னடி உபயோகத்துக்கு உலர்த்திவைப்பதில் இது சோளத்தைவிட மிகவும் சிரேஷ்டம். இது சுலபமாய் சுமைகட்டக்கூடுவதன்றியில் அதைவிட அதிககாலம் நல்ல ஸ்திதியில் காப்பாற்றிவைக்கக்கூடும்.

நெல்பயிர் தீனியை துண்டுதுண்டாய் நறுக்கினுல் குதிரைகளுக்கு நல்ல ஆகாரமாகும். இப்படி நறுக்கப்பட்ட உலர்ந்த பயிர்த்தீனி ஒரு டன் ரூபா 13-15-10–ம், நறுக்காத உலர்ந்த பயிர்த்தீனி 11–15–10–ம் விலையாகிறது.

சவுக்கும் தென்னையும் கலந்து தோப்புவைத்தல் 4190 சதுரகஜம் தாழ்ந்த மணல்கரம்பில் எருவிட்டுப் பயிர்செய்வதினால் சவுக்கும் தென்னையும் எப்படி பலிக்குமென்பதை அறியும்பொருட்டு பரிட்சைக்காக அவைகளை நடப்பட்டன. ஒரு தென்னையும் ஒரு சவுக்குமாக ஆறடிதூரத்தில் சாலை சாலையாய் அந்தப் பாத்திமுழுவதும் நடுவித்தேன். அகலநீளத்தில் 24 அங்குலமும், ஆழத்தில் 27 அங்குலமுமாக தென்னம்பிள்ளைக்கு குழிகள் வெட்டிவைத்தேன். 18 அங்குலம் அகலநீளமும், 18 அங்குலம் ஆழமும் உள்ளவைகள் சவுக்குசெடி குழிகள் பாத்தியிலேயே தென்னைநெற்றுகள் நட்டு நாற்று உண்டாக்கிக்கொண்டேன். அவைகள் நடுகிறகாலத்தில் 15 மாசத்திய நாற்றுகளாயிருந்தன. சவுக்குநாற்றுகள் 1000-ம் 5 ரூபாயாக வாங்கி நடப்பட்டன. இவைகளெல்லாம் நட்டது 73-ஷு பிப்ரவரிமீ 11வ. இப்போது 134 சவுக்கும், 69 தென்னையுமிருக்கின்றன. நட்டபிறகு சென்ற மார்ச்சுமீ 31வ வரையிலே 12 தண்ணீரிறைத்து 5-தரம் களைகொத்தப்பட்டது. நடும்போது பாத்திமுழுவதும் 4 பண்டி ரத்த எருவு 1874-ஷு பிப்ரவரிமாசத்தில் ஒவ்வொரு செடிக்கும் 2 பவுண்டு பிண்ணாக்கு எருவும் போடப்பட்டது. நட்டு ஒன்பதுமாசத்திற்குப்பிறகு ஒருதரமும் அடுத்த மார்ச்சு மாதத்தில் ஒருதரமும் சவுக்குசெடிகளின் கிளைகள் கழிக்கப்பட்டன. செடிகள் நல்ல வளமானவையாய் நன்றாய்ப் பலன்கொடுக்கத்தக்கவைகளாய்த் தோன்றுகின்றன.

பர்மாவிலிருந்து சில நெல்விதைகள் சம்பாதித்து இவ்விடத்திய நெற்பயிர்போலே பயிரிட்டதில் வைக்கோல்மாத்திரம் சரியாய்க் கிடைத்தபோதிலும் தானியம் மிகவும் சொலபமாயிருந்தது. அநேக கதிர்கள் தானியமில்லாமலே இருந்தன. வடகிழக்கு (ஈசானியம்) காற்று பூர்ணமாய் ஆரம்பிக்கிறதற்குமுன்னே விதைத்திருந்தால் இன்னும் சற்றே செவ்வையாய்ப் பலனைக் கொடுத்திருக்கலாம். கர்னாடகத்தைப்போல் மிகவும் வறண்டு காற்றில்லாமலிருக்கிற மலையாளமுதலாகிய மேற்குசீமைகளில் இந்த தானியங்கள் செவ்வையாய் பலிக்குமென்று காணுகிறது. இந்தத் தானியங்கள் இவ்விடத்திய தானியங்களைவிட விலையுயர்ந்தவைகளாகையால் விசேஷ வறட்சியில்லாத காற்றுள்ள பிரதேசங்களில் இவற்றைப் பரிட்சிப்பது லாபமாயிருக்கும்.

மோரீஷிலிருந்து வரவழைத்த பயறு சோளம் இவற்றின், பாரத்தில் பயிர் பலிக்கவில்லை. செடிகள் செவ்வையாய் முளைத்து 6 அடிக்குள்பட வளர்ந்து புஷ்பித்து காய்காய்க்கவில்லை; மறுபடி பரிட்சிக்கவேண்டும். சோளம் செவ்வையாய் வளர்ந்து விளைத்த 125 பவுண்டுக்கு 5000 பவுண்டு தூற்றிய சோளமாயிற்று.

நான் வேர்க்கடலை பிண்ணாக்கின் குணத்தை அறிந்து வெளிப்படுத்திய பிறகு மதிராஸண்டை அதன்விலை ஒன்றரைப்பங்காய்ப் போனதைப்பற்றி மைசூரில் குத்தகைப்பண்ணி வரவழைத்தேன். அங்கே ஆடுகிற பிண்ணாக்குகள் பேதியாகத்தக்க இதரதானியங்களுடன் சேர்த்து ஆடப்படுவதினால் அதைத் தின்ற ஆடுமாடுகள் நாள்வட்டத்தில் இளைத்துக் கெட்டுக்கொண்டு வந்தன.

தஞ்சாவூரில் வேர்க்கடலை பிண்ணாக்கை மாடுகள் செவ்வையாய்த் தின்பதில்லை என்றும், சிலநாள் தின்றால் இளைத்துப்போகிறதென்றும் கேள்விப்பட்டு பிண்ணாக்கு மாதிரிவரவழைத்து சோதித்ததில் கலப்பில்லாததாயிருந்

தாலும் செவ்வையாய் ஆடாததினாலே எண்ணெய் தீரப்போகாததாயிருந்தது. இந்த எண்ணெய் புதுசில் ருசியாயிருக்குமானாலும் நாள்பட புளித்துப் போம். அதை மாட்டுக்குப் போடுவதற்காகத் தண்ணீரில் நனைத்தால் இந்தப் புளிப்பு அதிகமாகுமாகையால் மாடுகள் தின்ன கஷ்டப்படும். அவ்வளவு எண்ணெயிருப்பதினால் சற்றே பேதியுமாகும். எண்ணெய் தீரப்போயிருந்தால் மாடுகளுக்கு முதல்தரமான தீனியாகுமென்பதற்குச் சந்தேகமில்லை.

வேர்க்கடலை எண்ணெய் யூரோப்பில் மிகுந்த விலைபெறத்தக்கினதாயிருக்கிறது. சணல்விரை எண்ணெயைவிட 100-க்கு 10 அல்லது 15 வீதம் அதிகமாயிருக்கிறதாகக் கேள்வி.

கீழ்வடிவு 4 ஏகராநிலம் பாரத்தில் கீழ்வடிவுடையதாக்கி பரிட்சிக்கப்பட்டது. சாதாரண ஜலதாரைகள் 24 அடிதூரத்தில் $3\frac{1}{2}$அடி ஆழத்தில் கட்டப்பட்டன. இவற்றின் தண்ணீர் எல்லாம் விழும்படியாய் இவற்றின் கடையில் குறுக்குவாட்டாய் ஒரு கால்வாய் (ஜலதாரை) வெட்டப்பட்டது. இந்த ஜலதாரையின் கடை செங்கல்சுண்ணாம்பினால் கட்டப்பட்டு எலிமுதலியவைகள் நுழையாதபடி இரும்புகம்பிகளால் ஜன்னல்போல் மூடப்பட்டது. பெரிய கால்வாயின் ஆழம், 4 அடி; அந்தநிலத்தை இரண்டு பாத்தியாக்கி ஒன்றில் கல்ஜலதாரையும், மற்றொன்றில் ஆனைக்கால் ஜலதாரையும் கட்டினேன். கல்ஜலதாரை கட்டினதில் ஏகராவுக்கு ரூபா; 65, 8, 10, ஆனைக்கால் குழாய் ஜலதாரை கட்டினதில் ரூபா. 41, 1, 1-ம் செலவு.

இன்னும் கொஞ்சகால அனுபவத்தினால் இந்தக்குழாய் ஜலதாரையின் செலவை 35 ரூபாயாக்கலாம். ஜலதாரைகளின் ஆழத்தை அதிகமாக்கி தூர தூர வைப்பதினால் செலவு பின்னும் குறைவுபடும். இந்த மொத்தத்தை 100க்கு 5 வீதம் வட்டியுடன் 25 கிஸ்தின்மேல் பங்கிட்டால் வருஷத்திற்கு ரூபா 2, 7, 8 விழுக்காடு செலவாகிறது. அந்த ஜலதாரைகளினால் உண்டாகும் பிரயோஜனத்திற்கு இது மிகவும் குறைந்த செலவென்று சொல்லலாம்.

அழுத்தமான மண்கள் கீழ்ஜலவடிவினால் அடையும் நன்மையைப்பற்றி ஒரு சந்தேகமுமில்லை. ஆனால் சுரையான் முதலானவைகள் குழாய்களை மூடாதபடிக்கும், 3 மாசத்திற்குப்பிறகு 24 மணிநேரத்தில் அகஸ்மாத்தாய் 5 அங்குலமழை பெய்வதினாலும், பின்னும் இப்படிப்பட்ட காரணங்களால் உண்டாகும் பாதகங்களைமாத்திரம் நிவிர்த்திசெய்யும் உபாயத்தைத் தேடவேண்டும்.

கல்ஜலதாரைப்பாத்தியில் செவ்வையாய் நீரோடவில்லை. எங்கேயோ அடைத்துக்கொண்டதனால் இப்போது நன்றாய் ஜலம் வருகிறதில்லை. வெயில்காலத்தில்உண்டான வெடிப்புகள் நல்ல மழையின்போது நுணுக்கமான (சிறியதான) மேல்பூமி தூள்களை கல்லுகளுக்கிடையில் செலுத்தியிருக்குமென்று தோன்றுகிறது. மழையில்லாதகாலத்தில் பூமிமேல் இந்த மாதிரி பொடிகள் உண்டாகி அதி நுட்பமாயிருப்பதுபற்றி ஜலத்தினால் கொண்டுபோகத்தக்கதாயிருக்கிறது. பூமியினின்று ஜலம் கிரமமாய் வடியுமானால் பொடி ஜலதாரையைச் சேராது. இந்த வெடிப்புகளினால் அங்கே சேருகிறது. இந்தத் தூள்கள் ஜலதாரையின் உடைந்த கல்லுகளுடன் சேர்ந்து ஜலமார்க்கத்தை அடைத்துப்போடுகிறதுகள். கீழ்வடிவு செவ்வையாயிருக்குமானால் இந்த வெடிப்புகள் அடங்கிப்போம். அடிக்கடி பயிரடித்து பூமியைத் தளரச்செய்வதினால் இதை வெகுவாயடங்கும்படி செய்யலாம். இந்த ஜலதாரை

கட்டுவதில் அதிக செலவு பிடித்ததேயாகிலும் அதெல்லாம் வேலையாலே; ஆகையாலே வேலைசெய்யத்தக்க ஆள்கள் குழாய் ஜலதாரை வைப்பதிலும் கல்ஜலதாரை கட்டுவதில் சௌக்கியமுடையவர்களாயிருப்பார்கள்.

குழாய்ஜலதாரை செவ்வையாய் வடிந்தது. இத்தேசத்திற்கு கல்ஜலதாரையைவிட குழாய்ஜலதாரை தகுந்ததாயிருக்கிறதென்று நம்முடைய சொல்ப அனுபவத்தினால் அறியத்தக்கதாயிருக்கிறது. குழாய்ஜலதாரையினால் உண்டாகும் மற்றொரு விசேஷ பிரயோஜனமாவதென்னவென்றால் இறைக்கவேண்டிய ஜலத்தைக் கீழாகவே அதன்வழியாய்ப் பாய்ச்சலாம். ஜலம் போகவொட்டாமல் தகுந்த இடங்களில் ஜலதாரையில் மதகுகள் கட்டவேண்டும். இவ்வித கீழிறைப்பினால் ஜலம் எல்லா இடங்களுக்கும் சமமாய்ப் பாயும். கால்வாய்க்காக மேலிடம் போகாதிருப்பதன்றியில் ஜலம் வெயிலினால் சுண்டாதிருக்கும். இப்படி ஜலவடிவையும் தண்ணீர்ப்பாய்ச்சலையும் ஒரேயிடத்தில் அகப்படுத்திக்கொள்வதினால் குடித்தனக்காரர்கள் அவ்வளவாய் மழையில்லாமையினால் தொந்தரவுபடும்படியிராது.

——»»««——

தசகுமார சரிதம்.

2-வது பாகம் முதற்கதை.

மகததேசத்திளவரசான ராஜவாஹனன் மாளவதேசத்தரசன்மகளை மணம்புரிந்து அவளுக்குக் குதூஹலமுண்டாகும்படி நாநாதேசத்துக் கதைகளையுஞ் சொல்லி வந்தானென்று முதற்பாகம் முடிவுபெற்றது.

இவ்வாறு கணவன் சொல்லிய விநோத விருத்தாந்தங்களைக் கேட்டு அவந்தி சுந்தரியானவள் அதிசயப்பட்டு, ஓ மகாராஜனே! உமது அனுக்கிரகத்தினால் இப்போதுதான் நான் காதுபடைத்தது சபலமாயிற்று; நீர் என் மனதில் அறிவு விளக்கேற்றி அஞ்ஞானாந்தகாரத்தையோட்டினீர்; அடியாள் உமக்குப் பணிவிடை செய்வதற்குப் பயனிதுதான்; யான் இப்பேருதவிக்குக் கைம்மாறு யாதொன்றுங் காண்கிலேன்; உமக்கு உரிமையில்லாத பொருள் ஒன்றும் அடியாளிடத்து இல்லையே; என்று சொல்லக்கேட்டு, ராஜகுமாரன் அவள் குணத்திற்கு வியந்தான். இப்படி பலவிதமாய்ப் பேசிக்கொண்டே இருவரும் மெய்ம்மறந்து உறக்கமுற்றனர். அப்படி நித்திரையாயிருக்கையில் இருவருக்கும், தாமரைநூலினால் காலிரண்டுங் கட்டுண்ட ஒரு முனிவர் கனவிற்றோன்றினர். உடனே இருவரும் எழுந்திருக்கையில், செங்கமலத்தில் சந்திரகிரணம் வீழ்வதுபோல், அந்த ராஜகுமாரன் தாள்களில் வெள்ளிவிலங்கு வந்து வீழ்ந்திருந்தது. அதுகண்டு அருகேயிருந்த அவன் மனையாள் இதென்னவென்று மனங்கலங்கி கோவென்று கதறத்தலைப்பட்டாள். அவ்வழுகைக் கூச்சலைக்கேட்டு அந்த அந்தப்புரத்திலுள்ளவர்கள்

அனைவரும் இன்னதென்று தெரியாமல் திகில்பிடித்தவர்களாய் மாரடித்துப் புலம்பிக்கொண்டு, இது உள்ளேபோகத்தக்க தருணமோ அல்லவோவென்பதைக்கூட விசாரியாமல் அங்கே வந்து நிறைந்துபோயினர். அது தெரிந்து காவலாளர்களெல்லாம் என்ன என்னவென்று ஓடிவந்து, விலங்கும் காலுமாய் ராஜகுமாரன் படுத்திருப்பதுகண்டு, அவனுடைய தேஜஸினால் அவனை ஒன்றுஞ் செய்யமாட்டாமல் இச்செய்தியை அப்போது அரசனாயிருந்த சண்டவர்மாவுக்கு அறிவித்தார்கள்.

அச்செய்தி காதில் விழ்வதற்குமுன்னமே சண்டவர்மா கண்களில் நெருப்புப்பொறிபறக்க ஓடிவந்து அந்த ராஜகுமாரன் அவந்தி சுந்தரியண்டை படுத்திருப்பதுகண்டு, ஓகோ! இவன், நம் சோதரனைக் கொல்லுவித்த பாலசந்திரிகையின் மணமகனான புஷ்போத்பவனுடைய மித்திரனாயிற்றே. தற்புகழ்ச்சியுள்ள அந்த வேஷக்காரன் என்னென்னவோ பற்பல தந்திரங்கள் செய்து நகரத்தாரனைவரையும் மோஹிப்பித்து மோசஞ்செய்தான். அவைநிற்க; சிங்கம்போல நாமிருக்க, நம்மையெல்லாம் அவமதித்து இந்தச் சிறுக்கி எப்படி இவன்மேல் ஆசைகொண்டாள். குலத்திற்கு அவதூறு விளைக்கவந்த இந்தத் தான்தோன்றிப்பெண் இன்னும் ஒரு நிமிஷத்தில், தன் கணவன் உயிரிழந்திருக்கக் காணப்போகிறாள் என்று வெருட்டிக்கொண்டே எயிறுதின்று புருவநெறித்து இருப்புத்தடி போன்ற தன் கையால் அந்த ராஜகுமாரனுடைய செந்தாமரைக் கைகளைப் பிடித்திழுத்தான். ஆயினும் அந்த ராஜகுமாரன், தைரியமும் பராக்கிரமமும் பொறுமையுமுடையவனாதலால், விதியை யார் வெல்லக்கூடுமென்று தன்னுள்ளத்தை உறுதிப்படுத்திக்கொண்டு, உயிரிழக்கத்துணிந்த தன் தேவியையும் என் கண்மணியே! நீ முன்னடந்த ஹம்ஸகதையை நினைத்துக்கொண்டு இரண்டுமாத காலம் பொறுத்திரு என்று சமாதானப்படுத்திப் பகைவர்கையில் சிக்கிக்கொண்டான்.

இச்செய்திகேட்டு அப்பெண்ணின் தாய்தந்தையர்கள், நீ எங்கள் மருமகனைக் கொல்வாயாகில், நாங்களும் அவனுடன் பிராணனை விட்டுவிடுவோம் என்றுசொல்லி மருமகனைக் காப்பாற்றினார்கள். ஆயினும் அவனைச் சிறைமீட்க அவர்களுக்கு வல்லமையில்லை. ராஜகாரியம் பார்த்துவந்த சண்டவர்மாவும் இச்செய்திகளெல்லாம் கைலாசமலையில் தவஞ்செய்துகொண்டிருக்கிற தர்ப்பசாரனுக்குத் தெரிவித்துவிட்டு, ராஜவாஹனனைச் சிறையில் வைத்ததுமன்றியில், அவனுக்குத் தோழனாயிருந்த புஷ்போத்பவனையும் குடும்பத்தோடுகூடக் காவல்செய்தான். சிங்கக்குட்டி வலையில் அகப்பட்டதுபோல பகைவர் கையில் அகப்பட்டுக்கொண்ட ராஜவாஹனனும், முன் தனக்கு ஓர் அந்தணன் கொடுத்த மணியின் மகிமையால், பசிதாகமுதலிய துயரங்கள் ஒன்றுமில்லாமலிருந்தான்.

இப்படியிருக்கையில் அந்த சண்டவர்மா, அம்பாலிகையென்கிற அங்கதேசத்தரசன் மகளைத் தனக்குக் கலியாணஞ்செய்து கொடுக்கும்படி கேட்டதற்கு அவன் சம்மதப்படாமையால் அவன்மேற் படையெடுத்து சம்பாநகரத்தை முற்றிக்கைபோட்டுக்கொண்டான். சிம்மவர்மாவென்கிற அத்தேசத்தரசன் தான் மிக்க பலிஷ்டனென்று தற்புகழ்ச்சிகொண்டு, துணைக்காகத் தான் எழுதியனுப்பிய ராஜாக்களெல்லாம் துரிதத்தில் வரப்போகிறதாயிருக்க அவையொன்றையும் மதியாமல், பகைவனை எதிர்த்தான். கடைசியில் சண்டவர்மா அவனைப் பிடித்துக்கொண்டு அவன் பெண்ணிடத்து உள்ள அன்பினால் அவனைக் கொலைசெய்யாமல் அவன் தேகத்திலிருந்த காயங்களையெல்லாம் ஆற்றிக் காவலில் வைத்துவிட்டு நாளை உதயத்திற்கு சிம்மவர்மாவின் மகளைப் பாணிக்கிரகணஞ்செய்யவேண்டுமென்று பிரசித்தப்படுத்தினான். உடனே அவன் அனுப்பியதற்குப் பதிலும் தர்ப்பசாரனிடத்தினின்றும் வந்தது. அடமுட்டாளே! பெண்களை அநியாயஞ்செய்த கொடியனிடத்திலும் கருணையா? கிழத்தனத்தால் மானவமானந்தெரியாமல் பெண்ணையே பெரிதாய்ப் பார்த்து அந்தக் கிழவன் ஏதாவது பிதற்றினால் அதை நீயேன் கேட்கவேண்டும்; அதிசீக்கிரத்தில் அந்தக் கொடியனைச் சித்திரவதைசெய்த செய்திகேட்டு என் செவி சுகிக்கவேண்டும்; அந்தத் தீயசெயற்செய்த சிறுக்கியையும் அவள் தம்பியையும் சிறைசெய்யவேண்டும் என்று சொல்லியனுப்பினான். அச்செய்தி கேட்டவுடனே சண்டவர்மா நாளைக் காலையில் சிறையிலிருக்கும் அந்தத் துஷ்டப் பயலைக் கோட்டைவாயலில் கொண்டுநிறுத்தி, பட்டத்து யானையையும் செம்மையாய்ச் சிங்காரித்து அவ்விடத்திற்கு ஓட்டிக்கொண்டுவரவேண்டும். இந்த விவாஹம் முடிந்ததும் நானே நேராய் வந்து அவனை அந்த யானைக்குக் கவளமாய்க் கொடுத்துவிட்டு, அப்புறம் அதன்மேலேயே ஏறிவந்து, இங்கே நம்மெதிரிக்குத் துணைசெய்ய வந்திருக்கிற ராஜாக்களை வெல்லுகிறேன் என்று செய்திசொல்லியனுப்பினான். அவர்களும் அப்படியே செய்வித்தார்கள். அத்தருணம் அந்த ராஜகுமாரனுக்குச் சாபம் நீங்குகிறகாலமாகையால் அவன் கால்களிலிருந்த வெள்ளிவிலங்கானது ஒரு தெய்வப்பெண்ணாகி, அவனை வலம்வந்து கும்பிட்டுக் கைகூப்பிக்கொண்டு எதிரே வந்துநின்று ஒரு வார்த்தைசொல்லிற்று. ஓ ஸ்வாமி! அடியாளிடத்தில் தேவரீர் கிருபைசெய்தருளவேண்டும்; நான் சுரதமஞ்சரியென்கிற ஒரு தெய்வப்பெண்; நான் ஒரு நாள் ஆகாயத்தில் பறந்துவந்த களஹம்சத்தை மடக்கி விளையாடிக்கொண்டிருக்கையில், என் கழுத்திலிருந்த முத்துமாலை நழுவி இமயமலையில் ஒரு தடாகத்தில் ஸ்நானஞ்செய்துகொண்டிருந்த மார்க்கண்டேயமுனிவர் தலையில் விழுந்தது; உடனே அவர் நீ அறிவிழந்து உலோஹமாய்ப் போகக்கடவையென்று சபித்தார்; அதுதெரிந்து

நான் அவர் காலில்வீழ்ந்து முறையிட்டுக்கொள்ளவே, அவர் என்னிடத்தில் இரக்கமுற்று, இரண்டுமாதகாலம் உமது கால்களுக்கு விலங்காயிருக்கும்படியாயும், அக்காலத்திலும் அறிவுகுறையாமலிருக்கவும் அனுக்கிரகித்தார்; அப்படியே நானும் வெள்ளிவிலங்காய் மாறிப்போயினேன். ஒருகால் வீரசேகரனென்கிற ஒரு வித்தியாதரன் என்னை எடுத்துக்கொண்டு வருகிறவழியில், தர்ப்பசாரன் தவஞ்செய்யக்கண்டான். அந்த வீரசேனன் நரவாஹனதத்தனென்கிற வித்தியாதரனிடத்தில்தான்ஏதோஒருகாரணத்தால்பகைகொண்டிருந்ததனால், அவனை வெல்வதற்கு இவன்தான் தக்கதுணையென்று அந்தத்தர்ப்பசாரனண்டைவந்து சேர்ந்தான். அவனும் வீரசேனனுக்குத் தன் உடன்பிறந்தாளைக் கன்னிகாதானம்பண்ணிக்கொடுக்கும்படிசபதம்பண்ணிக்கொடுத்தான். அப்படியிருக்கையில் அந்த வீரசேனன் அந்தப் பெண்ணைப் பார்க்கவேண்டுமென்று ஒருநாள் இரவில் பகல்போல நிலவுகாய்ந்துகொண்டிருக்கப் புறப்பட்டு இவ்வந்தப்புரம் வந்துபார்த்தான். நீங்களிருவரும் படுத்திருந்தீர்கள். அதுகண்டு அவன் கோபமூண்டு, உம்முடைய மகிமையால் உம்மைக் கொல்லத் திறமையற்று, விலங்குவடிவாய் அவன் கையிலிருந்த என்னால் உமது கால்களைக் கட்டிவிட்டுத் திரும்பிப்பாராமல் அப்புறம்போயினான். என் சாபம் இப்போது முடிவுபெற்றது. இனி அடியாள் செய்யவேண்டியது என்னவோ அருளிச்செய்யவேண்டுமென்று அந்தச் சுரதமஞ்சரி சொன்னதற்கு அந்த ராஜன், இச்செய்தியைச் சொல்லி பாலசந்திரிகையைத் தேற்றுவாய் என்று அனுப்பினான்.

அத்தருணத்தில், சண்டவர்மா சிம்மவர்மாவின் மகளை மணம்புரியப்போனபோது யாரோ ஒருவன் மறைவாய்வந்து அவனைப்பிடித்திழுத்துக் கொன்றுவிட்டு மற்றுமங்கிருந்தவர்களையடித்து முழுதும் பிணக்காடாக்கினான் என்றுகூச்சல் உண்டாயிற்று. அது காதிற்பட்டமாத்திரத்தில் ராஜவாஹனன் தன்னைக் கொல்லவந்த யானைமேலேயே ஏறிக்கொண்டு அதிவேகமாய் அவ்விடம்போய்ச் சேர்ந்து ஒருவரையும் மதியாமல் உள்ளே நுழைந்து, லோகோபகாரமான இச்செயல்செய்த மகாபுருஷன் எவன்? அவன் அதிவேகமாய் வந்து என்னுடன் இந்த யானைமேலேறிக்கொள்ளலாம். அவனுக்கு ஒருபோதும் ஒருபயமும் இல்லை என்று கூவினான். அவன் அதைக்கேட்டு ஸந்தோஷமடைந்து ராஜகுமாரனெதிரேவந்து அவனைக் கும்பிட்டு அந்த யானைமேலேறிக்கொண்டான். அவனைக்கண்டு ராஜவாஹனன், ஓ! ஓ! இவன் நம்தோழன், அபஹாரவர்மாவாயிற்றேயென்று அகங்களித்து அழுந்த ஆலிங்கனஞ்செய்துகொண்டான். யானைமேலேறினவுடன் அபஹாரவர்மாவும்பற்பல பகழிகளைப் பகர்ந்து தன்னை எதிர்த்தவர்களைத் துரத்தினான்.

அவர்களுக்கு எதிரே மற்றொருவன், மிகுந்தோடினவர்களைப் புடைத்துக்கொண்டேவந்து, அவ்விருவரும் யானைமேலிருக்கக் கண்டு, முன் அபஹாரவர்மாவினிடத்தினின்றும் கேள்விப்பட்ட லக்ஷணங்களோடு இருப்பதனால் இவன்தான் ராஜவாஹனனென்று அவனுக்குத் தண்டன் சமர்ப்பித்து அபஹாரவர்மாவைப்பார்த்து, ஸ்வாமி தங்கள் கட்டளைப்படி அங்கதேசத்தாசனுக்குத் துணைசெய்யவந்த அரசர்களைக் கொண்டுசேர்த்தேன். இனிச் செய்யவேண்டுவதை நியமிக்கக்கடவீர்"என்றான். அபஹாரவர்மாவும் அவனுடைய பராக்கிரமத்துக்கு வியந்து, ராஜகுமாரனைப்பார்த்து, இவனைக் கடாக்ஷிக்கவேண்டும். நம்முயிரைவிட இவனே நமக்கு மேலான ஆப்தனென்று சொல்லலாம். எங்கேயாவது ஏகாந்தமாய்ப்போய் உட்காருவோம். அங்காராஜன் முதலிய நம் தோழர்களை அழைத்துவரச்சொல்லலாமா? என்று கேட்டதற்கு, ராஜவாஹனன் உன்னிஷ்டப்படி நடக்கலாம் என்றான். அப்படியே அபஹாரவர்மா அவர்களையெல்லாம் அழைத்துவரும்படி தன் சேவகனுக்குக் கட்டளையிட்டுத் தானும் ராஜகுமாரனுடன் பட்டணத்துக்கு வெளியில் ஒரு உத்தியானவனத்திற்குப் போய்ச்சேர்ந்தான். உடனே நொடிப்பொழுதில் தனமித்திரன் என்கிற சேவகன், உபஹாரவர்மா, அர்த்தபாலன், பிரமதி, மித்திரகுப்தன், மந்திரகுப்தன், விச்ருதன், மிதிலாநகரத்தரசனான பிரஹாரவர்மா, காசிதேசத்தரசனான காமபாலன், சம்பாநகரத்தரசனான சிம்மவர்மா இவர்களை அழைத்துவந்தான். ராஜவாஹனனும் தன் தோழர்களெல்லாம் ஒருமிக்கவந்து சேர்ந்ததுகண்டு கிருத்தியாகிருத்தியமொன்றுந் தெரியாமல் ஒருநிமிஷம் பிரமித்துநின்று பின்பு அவரவர்களுக்குத் தக்கபடி மரியாதைசெய்து புதிதாய்வந்திருக்கிற மிதிலாராஜன்முதலிய மூவருடைய வரலாற்றை அபஹாரவர்மா சொல்லத் தெரிந்துகொண்டு தங்கள் மூவருடைய கதைகளை அவர்களுக்குச் சொல்லிப்பிறகு அவர்களுடைய கதைகளைக் கேட்கலுற்றான். முதலில் அபஹாரவர்மா சொல்லத்தொடங்கினான்.

கீழ்ச்சொல்லிய அபஹாரவர்மாமுதலிய பதின்மரே தசகுமாரர்கள்.

சமாசாரம்.

கவர்னர் சமஸ்தானம்வந்து சேர்ந்தது.—பதிலுக்குக் கவர்னர் உத்தியோகம் நிர்வகிக்கும் கௌரவ ராபின்ஸன் துரையவர்கள் பத்தினியார் சகிதம் பரிஜனத்துடன் உதகமண்டினின்று விசேஷவண்டித்தொடரில் சென்னையில்வந்து சேர்ந்தது சென்ற வியாழம் காலையில். கவர்னர் வரவு முறைமைப்படி பீரங்கிவெடி உபசரணையால் நகரமாக்களுக்குத் தெரியவந்தது. இந்தச் சிறந்த துரைக்கு நைட்டுப்பட்டம் தரப்படுமென்று ஒரு வதந்தி பிறக்கின்றது.

இளவரசர் ஊர்க்கோலம் வருமார்க்கத்தில் செய்யும் அலங்காரம்.—ராயபுரம் இருப்புப்பாதை ஸ்தானமண்டபத்தினின்று துரைத்தனமாளிகைக்கு இளவரசர் நகரத்தினுட் செல்லுமார்க்கத்தில் செய்ய நினைந்திருக்கும் சிங்காரமான அலங்காரங்கள் சில இவை:—பவனிவருமார்க்கத்தில் குடியடர்ந்தவீதி தம்புசெட்டிவீதி. இவ்வீதியின் இருமருங்கும் அவ்வவ் வீட்டுவாசலுக்கு எதிரில் சுதேசர் முறைமைப்படி தோரணமுதலிய அலங்காரங்கள் செய்விக்க மேல்விசாரணைசபை ஒன்று ஏற்பட்டது. இவ்வீதியின் தெற்கு மைதானம். அம்மைதானமார்க்கமாய்த் துரைத்தனமாளிகைவரையும் செல்லும் சாலையைச் சிங்காரிப்பிக்கும் பாரம் ஐரோப்பியதுரைகள் சிலர் பெயரில் பொறுத்தது. அவர்கள் உபாயம் சூழ்ந்து தம்மனதிற்கு ஏற்க சோடினைசெய்விப்பார்கள். இளவரசர் தம்புசெட்டிவீதி கடந்தபின் தீபஸ்தம்ப மைதானத்தோரமாய் கோட்டை வடக்குவாசலுக்கு நேர்முகமாய்ச் செல்லும். இந்தக் கிளைச்சந்தியில் ப்ரீ சர்ச் மிஷன் வித்தியாலயத்திற்கு எதிர்முகமாய் மிகச்சிறந்து வில்வளைவான வெற்றித்தோரணம் ஒன்று கட்டப்படும். இவ்வழியில் முதல்முதல் அமைக்கப்படும் தோரணம் இதே. இளவரசர் முதலியவர்கள் வடக்குவாசல்வழியாய்க் கோட்டைக்குள் பிரவேசிக்காமல் மேற்குமுகமாய்த் திரும்பி, பாப்பம்வீதித் தொடர்ச்சந்தியிற் சேர்வார்கள். அங்கும் ஒரு வெற்றித்தோரணம் பணிக்காய்ச் சமைந்திருக்கும். அப்பால் வாலாஜாவாரதியின் தெற்குமுனையில் கடற்கரை மைதானச்சாலையில் மூன்றாவது தோரணம் துலங்கும். நாலாவது தோரணஸ்தானம் துரைத்தனமாளிகைக்கு அயல்வாரதியின் வடமுனை. இந்நான்கு தோரணங்களில் மிக்க அலங்காரம்பொருந்தி மிகு தனவிரயம் கொள்வது இதே.

பாரியதோரணங்கள் நாலு. சற்றுச்சிறிய தோரணம் வசதிகண்டு அங்கங்கே பல கட்டப்படும். கோட்டை வடக்குவாசற்சந்தியில் ஒன்று; வைத்தியசாலை வீதியும் மலைச்சாலையும் சந்திக்கும் இடத்தில் ஒன்று; வாலாஜாவாரதியின் வடக்குமுனையில் கோட்டைத் தெற்குவாசற்சந்தியில் ஒன்று. பின்னும் பலதோரணங்கள் உண்டு. சாலையின் இருமருங்கும் இருபத்தைந்து அடி தூரத்திற்கு ஒன்றாக த்வஜஸ்தம்பங்கள் பல நாட்டப்படும். வேறு சில பாரிய த்வஜம் ஏற்றும் ஸ்தம்பங்களும் நாட்டுவார்கள். முக்கிய ஸ்தம்பங்கள் வாலாஜாவாரதியிலும் துரைத்தனமாளிகை வாரதியிலும் வேறு சில சிறந்த ஸ்தானங்களிலும் நாட்டுவார்கள். அன்றியும் துரைத்தனமாளிகைத் தோட்டத்து வாசலுக்கும் ப்ராங்குவர்த்தகர் தோட்டத்து வாசலுக்

கும் இடையில் சாலைமத்தியில் சிறந்த ஜலாகரம் ஒன்று ஏற்படும். அதன் சுற்றிடத்தில் தாமரைமுதலிய நீரில் உற்பத்தியாகும் புஷ்பச்செடி கொடி வர்க்கம் கண்குளிரத்தோன்றும்படி வைத்திருப்பார்கள். மேலும் ப்ராங்கு வர்த்தகர் தோட்டத்துச் சுற்றுமதில் உச்சியிலும் எதிரே நேபியர் உத்தியானத்திலும் பங்களூரினின்று தருவித்த விதவிதமான பசுஞ்செடிகள் பல அணியணியாய் வைக்கப்படும். வாலாஜாவாரதிக்கும் துரைத்தனமாளிகை வாரதிக்கும் இடையே மலைச்சாலையின் இருபுடையும் சென்னைப் பாடசாலைகளின் இருபால் மாணாக்கரும் அணியணியாய் உட்காந்திருக்கும்படி நேத்தியான ஆசனங்கள் வைக்கப்படுமாம்.

இத்தேசத்திற்கு வருகிறமாதம் விஜயஞ்செய்யப்போகிற நமது இளவாசர் ஏறக்குறைய அடியிற்குறித்த காலவரையறைப்படி பிரயாணம் போவாரென்று கேள்வி:—

நொவெம்பர்மீ	19.	*பேப்பூரும் கோயம்புத்தூரும்.*
,,	20.	*பள்ளாச்சிக்குச் செல்வது.*
(ஞாயிறு.)	21.	
,,	22.	*ஆனைமலைவேட்டை.*
,,	23.	
,,	24.	
,,	25.	*கோயம்புத்தூர்.*
,,	26.	*உதகமண்டு.*
,,	27.	
(ஞாயிறு.)	28.	*மைசூர்.*
,,	29.	
,,	30.	*பெங்களூர்.*
டிஸெம்பர்மீ	1.	*பெங்களூர்—ராத்திரி சென்னைக்கு.*
,,	2.	
,,	3.	
,,	4.	*சென்னை.*
(ஞாயிறு.)	5.	
,,	6.	
,,	7.	*திரிசிரபுரம்.*
,,	8.	
,,	9.	*மதுரை.*
,,	10.	*தூற்றுக்குடி—இலங்கைக்கு மரக்கலம் ஏறல்.*

Printed at the C. K. S. Press.